www.Padasalai.Net

# இரண்டாம் பருவ இடைத்தேர்வு – நவம்பர் 2022

**IX - Std**

காலம் : 1.30 மணி

## கணிதம்

மதிப்பெண்கள் - 50

### பகுதி – அ (மதிப்பெண்கள் - 7)

**குறிப்பு : இப்பிரிவில் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:-** 7 x 1 = 7

1. ஓர் இணைகரத்தின் உள்கோணங்கள் $90^0$ எனில், அந்த இணைகரம் ஒரு ______

   (A) சாய்சதுரம் (B) செவ்வகம் (C) சரிவகம் (D) பட்டம்

2. வட்ட நாற்கரத்தின் ஒரு கோண அளவு $75^0$ எனில், அதன் எதிர் கோண அளவு

   (A) $100^0$ (B) $105^0$ (C) $85^0$ (D) $90^0$

3. $O$ – வை மையமாகக் கொண்ட வட்டத்தில் சமநீளமுள்ள நாண்கள் $PQ$ மற்றும் $RS$. மேலும் $\angle POQ = 70^0$ எனில், $\angle ORS =$ _____

   (A) $100^0$ (B) $105^0$ (C) $85^0$ (D) $90^0$

4. $(-a, 2b)$ மற்றும் $(-3a, -4b)$ ஆகிய புள்ளிகளை இணைக்கும் கோட்டுத்துண்டின் நடுப்புள்ளி

   (A) $(2a, 3b)$ (B) $(-2a, -b)$ (C) $(2a, b)$ (D) $(-2a, -3b)$

5. ஒரு புள்ளியின் $y$ அச்சுத் தொலைவு 4 மற்றும் அப்புள்ளி $y$ அச்சில் அமைந்தால் அப்புள்ளி ____ ஆகும்.

   (A) $(4, 0)$ (B) $(0, 4)$ (C) $(1, 4)$ (D) $(4, 2)$

6. $(x+2, 4) = (5, y-2)$ - எனில் $(x, y)$ இன் மதிப்பு

   (A) $(7, 12)$ (B) $(6, 3)$ (C) $(3, 6)$ (D) $(2, 1)$

7. $(5, -1)$ என்ற புள்ளிக்கும் ஆதிப்புள்ளிக்கும் இடையே உள்ள தொலைவு ________

   (A) $\sqrt{24}$ (B) $\sqrt{37}$ (C) $\sqrt{26}$ (D) $\sqrt{17}$

### பகுதி – ஆ (மதிப்பெண்கள் - 10)

**குறிப்பு : ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 14 வது வினா கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** 5 x 2 = 10

8. பொது மையவட்டங்கள் வரையறு. மேலும் உதாரணம் தருக.

9. படத்தில் $x^\circ$ மதிப்பு காண்க.




10. ஆரம் 12 செ.மீ உள்ள வட்டத்தின் மையத்திலிருந்து $2\sqrt{11}$ செ.மீ தொலைவில் உள்ள நாணின் நீளம் காண்க.

11. $(-4, 3), (2, -3)$ என்ற புள்ளிகளுக்கு இடையே உள்ள தொலைவினைக் காண்க.

12. $A(2, -4), B(-3, -7)$ மற்றும் $C(7, 2)$ ஆகியவற்றை முனைப்புள்ளிகளாகக் கொண்ட முக்கோணத்தின் நடுக்கோட்டு மையம் காண்க.



Kindly send me your district Questions & Keys to email id - padasalai.net@gmail.com

CamScanner

www.Padasalai.Net

13. புள்ளிகள் $A(4,-3)$ மற்றும் $B(9,7)$ ஆகியவற்றை இணைக்கும் கோட்டுத்துண்டை $3:2$ என்ற விகிதத்தில் உட்புறமாகப் பிரிக்கும் புள்ளியின் ஆயத்தொலைவைக் காண்க.

14. ஒரு வட்டத்தின் மையப்புள்ளி $(3,-4)$. $AB$ ஆனது அந்த வட்டத்தின் விட்டம் மற்றும் $B(5,-6)$ எனில் $A$ இன் ஆயத்தொலைவைக் காண்க.

## பகுதி – இ (மதிப்பெண்கள் - 25)

குறிப்பு : ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 21 வது வினா கட்டாயமாக விடையளிக்க வேண்டும். $5 \times 5 = 25$

15. $O$ – வை மையமாகக் கொண்ட வட்டத்தில் $AB$ மற்றும் $CD$ என்பன இரு இணையான நாண்கள் ஆகும். மேலும் ஆரம் 10 செ.மீ, $AB = 16$ செ.மீ மற்றும் $CD = 12$ செ.மீ எனில், இரு நாண்களுக்கு இடைப்பட்ட தொலைவைக் காண்க.

16. ஒரு நாற்கரத்தின் கோணங்களின் விகிதம் $2:4:5:7$ எனில் அதன் அனைத்து கோண அளவுகளையும் காண்க.

17. வட்டநாற்கரம் $PQRS$ இல் $\angle PSR = 70^0$ மற்றும் $\angle QPR = 40^0$ எனில், $\angle PRQ$ ஐக் காண்க.




18. புள்ளிகள் $(9,3), (7,-1)$ மற்றும் $(-1,3)$ வழிச் செல்லும் வட்டத்தின் மையம் $(4,3)$ என நிறுவுக. மேலும் அவ்வட்டத்தின் ஆரம் காண்க.

19. $(x,3)$, $(6,y)$, $(8,2)$ மற்றும் $(9,4)$ ஆகிய புள்ளிகள் வரிசையாக எடுத்துக்கொள்ளப்பட்ட இணைகரத்தின் உச்சிகள் எனில் $x$ மற்றும் $y$ -இன் மதிப்புகளைக் காண்க.

20. $A(-5,6)$ மற்றும் $B(4,-3)$ ஆகிய புள்ளிகளை இணைக்கும் கோட்டுத்துண்டை மூன்று சமப் பாகங்களாகப் பிரிக்கும் புள்ளிகளின் ஆயத்தொலைவைக் காண்க.

21. $A(7,10), B(-2,5), C(3,-4)$ என்ற புள்ளிகள் ஒரு செங்கோண முக்கோணத்தின் உச்சிகள் என நிறுவுக.

## பகுதி – ஈ (மதிப்பெண்கள் - 16)

குறிப்பு : ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளிக்கவும். $1 \times 8 = 8$

22. (அ). $AB = BC = 6$ செ.மீ, $\angle B = 80^0$ என்ற அளவுகளுக்கு முக்கோணம் $ABC$ வரைந்து அதன் அம்முக்கோணத்தின் உள்வட்ட மையம் வரைக. மேலும் ஆரத்தை அளந்து எழுதுக.

அல்லது

(ஆ). $AB = 5$ செ.மீ, $\angle A = 60^0$ மற்றும் $\angle B = 80^0$ அளவுள்ள முக்கோணம் $ABC$ வரைந்து, அம்முக்கோணத்தின் சுற்று வட்டம் வரைக. மேலும் சுற்று வட்டத்தின் ஆரத்தை அளந்து எழுதுக.



Kindly send me your district Questions & Keys to email id - padasalai.net@gmail.com
CamScanner